**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.20/2020 - PW-7**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.விஜயலோகேஷ் | Occupation | சொந்த வியாபாரம் |
| Husband/ Father Name | திரு.விஜயராகவன் | Age | 37 |
| Village /Area | முப்பது வெட்டி | Religion | -- |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 8116 4324 0259 |
| District | இராணிப்பேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 17.07.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது முப்பது வெட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சொந்தமான தொழில் செய்து வருகிறேன். கடந்த 02.03.2014-ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் நானும், என் நண்பர் அன்பு என்பவரும் எங்கள் ஊரிலுள்ள விநாயகர் கோவிலுக்கு வெளியில் இருந்தோம். அப்போது ஆற்காடு நகர போலிசார் அந்தப்பக்கம் வந்தனர். அந்த சமயத்தில் எதிரி செந்தாமரை கண்ணன் என்பவர் ஆற்றுப்பக்கமாக இருந்து அங்கு வந்தார். எதிரி செந்தாமரை கண்ணன் இன்று இந்நீதிமன்றத்தில் 2-வதாக நிற்கிறார். எங்கள் ஊரில் அன்று காலை மணிகண்டன் என்பவருக்கும், சிலம்பரசன் என்பவருக்கும் சண்டை நடந்தது. அதன் பிறகு நடராஜன் என்பவரும் ராஜேந்திரன் என்பவரும் சண்டை சம்மந்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது மதியம் எதிரிகள் கண்ணன், பாஸ்கரன், சிலம்பரசன், பிரேம், சரத், கபிலன் ஆகியோர் அங்கு சென்று நடராஜனையும், ராஜேந்திரனையும் தாக்கினார்கள். அது சம்மந்தமாக எதிரி செந்தாமரை கண்ணன் என்பவரை ஆற்காடு நகர போலிசார் மாலை 5.30 மணியளவில் எங்கள் ஊர் விநாயகர் கோவில் என் முன்னிலையிலும், அன்பு என்பவர் முன்னிலையிலும் கைது செய்தார்கள். பின்னர் எங்கள் முன்னிலையில் செந்தாமரை கண்ணன் ஆற்காடு நகர போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். அவர் கொடுத்த வாக்குமூலத்தில் அன்று காலையில் மணிகண்டன் என்பவருக்கும், சிலம்பரசனுக்கும் நடந்த

சண்டை பற்றியும் அதன் தொடர்ச்சியாக நடராஜனும், ராஜேந்திரனும் பேசிக்கொண்டிருந்த போது செந்தாமரை கண்ணனும், பாஸ்கர், சிலம்பரசன், பிரேம், கபிலன், சரத் ஆகியோர் அவர்களை அடித்ததை சொன்னார்கள். இரும்பு ராடு, முள்வேலிக்கட்டையால் தாக்கியதாக வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஆயுதம் எங்கு உள்ளது என போலிசார் கேட்டதால் அருகாமையில் முற்புதரில் உள்ளது என கூறினார். செந்தாமரை கண்ணன் கொடுத்த வாக்குமூலத்தை போலிசார் பதிவு செய்தனர். அதில் நானும், அன்பு என்பவரும் கையெழுத்து செய்தோம். அதன் பிறகு செந்தாமரை கண்ணன் அடையாளம் காட்டி முற்புதரிலிருந்து இரும்பு ராடு மற்றும் முள்வேலி கட்டை எடுத்து போலசாரிடம் ஆஜர் செய்ததை போலிசார் மகசரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2–வதாக உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். என்னுடைய கையெழுத்து **அ.சா.ஆ.8** ஆகும். கைப்பற்றுதல் மகசரிலுள்ள என்னுடைய 2–வதாக உள்ள கையெழுத்து **அ.சா.ஆ.9** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு ராடுகள் (2–எண்ணிக்கை) மற்றும் முள்வேலி கொம்புகள் (2–எண்ணிக்கை) தான் மகசரில் எங்கள் முன்னிலையில் அன்றைய தினம் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக ஆற்காடு நகர போலிசார் என்னை விசாரித்தனர்.

(எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். **குறுக்குவிசாரணை இல்லை** என தெரிவிக்கப்பட்டு, அது பதிவு செய்யப்படுகிறது.)

Sd/-A.Balakrishnan,
I Additional District Judge,
Ranipet.